[22nd November 1963

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அது பற்றி என்னிடத்தில் தகவல் இல்லை.

திரு. செ. மாதவன் : அரசாங்கம் பஞ்சாயத்து யூனியன்களுக்கு செர்விஸ் புக்ஸ் சப்ளை செய்யாத காரணத்தால்தான் இந்தக் கால தாமதம் ஏற்பட்டது என்பது உண்மையா? உடனடியாக, பஞ்சாயத்து யூனியன்களில் வேலை பார்க்கும் எல்லா அலுவலர்களுக்கும் செர்விஸ் புக் 'ஓப்பன்' பண்ண சர்க்கார் உத்தரவிடுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : கனம் அங்கத்தினர் அவர்கள் இது பற்றித் தனியாக எழுதி அனுப்பினால் பரிசீலிக்கலாம்.

கால்நடை மருத்துவ மனைகள்

*458 கேள்வி.—திரு. சி. ம. அம்பிகாபதி : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கால்நடை மருத்துவமனைகள் எந்த அடிப்படையில் திறக்கப்படுகின்றன ?

(இ) 1963-ல் திறக்கப்படவிருக்கும் மருத்துவமனைகள் எத்தனை ஜில்லாவாரியாக ?

THE HON. SRI P. KAKKAN : (a) Veterinary Dispensaries are being opened in Taluk and Block Headquarters. In other places, they are opened depending upon the local demand, cattle population, disease position, availability of land, buildings, staff etc., preference being given to Panchayat Unions which have no dispensary within a radius of 5 miles and where the Unions come forward to donate lands, construct buildings or make any other contribution.

(b) Thirty dispensaries and the district-wise particulars are :—

South Arcot District—4.
North Arcot District—2.
Thanjavur District—1.
Madurai District—4.
Ramanathapuram District—3.
Tirunelveli District—5.
Tiruchirappalli District—3.
Salem District—4.
Coimbatore District—4.

சிமெண்டு ரோடுகள் (இராமநாதபுரம் மாவட்டம்)

*459 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் சிமெண்ட் ரோடுகள் போடப்பட்டுள்ளனவா ?

(இ) ஆமென்றால், எத்தனை மைல்கள் ?